# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.2 உடன்படிக்கையின் தேவன்

**வேத வசனம்:** **என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்.**

*எரேமியா 7:23*

**அறிக்கை:** **தேவனுடைய அனைத்து கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவேன்**



**சத்தியம்:** கர்த்தர் நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும் நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும் படிக்கு நடவுங்கள் என்று கட்டளையிட்டு சொல்லி, ஒரு நோக்கத்தோடு மக்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

### வேத பகுதி: ஆதியாகமம் 12:1-8

**பாடம்**

**1. பலவீனமும் தோல்வியுமான வாழ்க்கை:** மனிதனின் வாழ்வு ஆசீர்வாதமாகவும் வெற்றியாகவும் இருக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். ஆனால் மனித வாழ்வில் சில வேளைகளில் பெலவீனமும் தோல்வியும் நிரம்பி இருக்கிறது. (மத்தேயு 7:26)

**2. கீழ்ப்படியாமையின் விளைவு:** ஒரு கீழ்ப்படியாத இதயம் தேவ ஆசீர்வாதத்தைத் தடுக்கிறது. தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமான ஒவ்வொரு கீழ்ப்படியாமையும் தேவனுடைய ஆசீர்வாதங்களை விட்டு நம்மை விலகச்செய்வதுடன் வாழ்வை மேலும் மேலும் சிக்கல் உள்ளதாக மாற்றுகிறது. இது நம்மை பெலவீனப்படுத்தி தோல்விக்குள்ளாக்குகிறது.

**3. ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான்:** ஆபிரகாம் முழு இருதயத்துடன் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தார். அது அவரை கானான் தேசத்துக்கு தலைவனாக மாற்றியது. அவர் தேவனுடைய சித்தத்தை செய்ய அது வழி வகுத்தது. அவருடைய விசுவாசமும் கீழ்ப்படிதலும் அவரை ஒரு பெரிய தேசமாகவும், பெருமையுள்ள பெயரைக் கொண்டவராகவும் மிகுந்த ஆசீர்வாதத்தை உடையவராகவும் மாற்றியது.

**4. தேவன் மனிதனுடன் உடன்படிக்கை ஏற்படுத்த விரும்பினார்:** நாம் தேவனுக்கு முழுவதும் கீழ்ப்படிந்தோம் என்றால் அவர் நமக்காக வாக்களித்த தம்முடைய ஆசீர்வாதங்களை நம்மில் நிறைவேற்றுவார். இந்த உடன்படிக்கையை தேவன் நம் அனைவருடனும் செய்துகொள்ள விரும்புகிறார். உதாரணம் (உபா. 5:16) "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (1 பேதுரு 5:5) "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்"

**5. தேவனுடைய எல்லா வார்த்தைகளுக்கும் கீழ்ப்படியுங்கள்:** நாம் எப்போதும் தேவனுடைய கட்டளைகளை நினைவுகூர்ந்து அவைகளிலே வாழ வேண்டும். அவைகளால் வரும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் வேத வார்த்தைகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்". (சங். 119:1, யோவான் 6:63)

**முடிவுரை:** தேவன் தம்முடைய மக்கள் அனைவரும் பெலனுள்ளவர்களாகலும் செழிப்பானவர்களாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார். அதனால் உலகில் உள்ள அனைத்து மக்களும் அவருக்கு பயந்து நடப்பார்கள். எரேமியா 7:23 ன் படி தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு உரிய நிபந்தனை அவருடைய உடன்படிக்கையில் இருப்பதே.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.